பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# பித்அத் ஒழிப்பு மாநாடு ஏன்?

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தமிழகம் தழுவிய அளவில் பித்அத் ஒழிப்பு மாநாட்டை அறிவித்துள்ளது.

பித்அத் என்றால் என்ன? அவை ஏன் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை இப்பிரசுரம் வாயிலாக அறிந்து கொள்வோம்.

## பித்அத் என்றால் என்ன?

பித்அத் என்ற அரபி வார்த்தைக்கு புதுமை என்று பொருள்.

நபிகளாருக்குப் பிறகு மார்க்கத்தின் பெயரால் புதிது புதிதாக உருவாக்கப்பட்ட காரியங்களே பித்அத் ஆகும். நன்மை எனக் கருதி மக்கள் அவற்றை செய்கின்றனர். ஆனால் நபிகள் நாயகம் கற்றுத்தரவில்லை என்பதால் அவற்றிற்கு எந்தவொரு நன்மையும் கிடையாது.

இஸ்லாம் பரிபூரணமாக்கப்பட்ட மார்க்கம். எந்தவொரு செயலை வணக்கம், வழிபாடு என்று நாம் சொல்வதாக இருந்தாலும் அவை நபிகள் நாயகத்தின் காலத்தில் இருந்திருக்க வேண்டும்.

ஏனெனில் நபிகள் நாயகம் காலத்திலேயே இம்மார்க்கம் இறைவனால் முழுமை படுத்தப்பட்டு விட்டது.

நபிகளார் காலத்தில் இல்லாத, அவர்களின் காலத்திற்கு பிறகு உருவாக்கப்பட்ட எந்த ஒன்றுக்கும் இஸ்லாத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. அவை இஸ்லாத்தில் இல்லாத பித்அத்களாகும்.

இன்று உங்கள் மார்க்கத்தை உங்களுக்கு முழுமைப்படுத்தி விட்டேன். எனது அருட்கொடையை உங்களுக்கு நிறைவாக்கி விட்டேன். இஸ்லாத்தை உங்களுக்குரிய மார்க்கமாகப் பொருந்திக் கொண்டேன்.

அல்குர்ஆன் 05:03

## அண்ணலாரின் அப்பழுக்கற்ற போதனை

நபி (ஸல்) கூறினார்கள்: நான் உங்களை (மார்க்கம்) வெண்மையான நிலையில் விட்டுச் செல்கின்றேன். அதனுடைய இரவும், பகலைப் போன்றதாகும். அழியக் கூடியவனைத் தவிர வேறு யாரும் எனக்குப் பிறகு அதை விட்டும் வழி தவற மாட்டார்கள்.

அறிவிப்பவர்: இர்ஃபாள் பின் ஸாரியா (ரலி) நூல்: அஹ்மத் 16519

## இஸ்லாமியர்களிடத்தில் நுழைந்து விட்ட புதுமைகள்:

நபி (ஸல்) அவர்களின் காலத்திற்கு பின் வந்த இஸ்லாமியர்களில் சிலர் மார்க்கத்தில் இல்லாத புதுமைகளை இஸ்லாத்தின் பெயரால் புகுத்த ஆரம்பித்தனர். மார்க்கம் படித்த சில ஆலிம்கள் அதில் முக்கியப் பங்கு வகித்தனர். குர்ஆன் , ஹதீஸ் ஆகிய இரண்டு மட்டும் தான் இஸ்லாத்தின் அடிப்படை என்பதை மறைத்து தங்களின் கைச்சரக்குகளை கட்டவிழ்த்து விட்டு காசு பார்க்கத் துணிந்தனர். அப்பாவி மக்களின் நெஞ்சங்களில் பித்அத் எனும் நஞ்சைக் கலந்தனர். மக்களும் அறியாமையின் காரணத்தினால் நன்மை என நினைத்து அவற்றை நடைமுறைப் படுத்தத் துவங்கினர்.

இறந்தவர்களின் பெயரால் ஓதப்படும் கத்தம் பாத்திஹாக்கள் உள்ளிட்ட பலவகை பாத்திஹாக்கள், மீலாது விழா, ஸலவாதுன் நாரிய்யா ஓதுதல் மற்றும் கூட்டு துஆ போன்ற யாவும் மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும் பித்அத்களாகும்.

இவற்றிலிருந்து முஸ்லிம் சமுதாயம் விலகிட வேண்டும்.

## பித்அத் குறித்த தவறான புரிதல்.

பித்அத்கள் கூடாது என நாம் பிரச்சாரம் செய்யும் போது அதற்கு எதிர் கருத்துடையோர் சில வாதங்களை முன் வைக்கின்றனர்.

நபிகளார் காலத்தில் இல்லாத பல விஷயங்களை நீங்களும் புதுமையாகத்தானே செயல்படுத்துகிறீர்கள்.

உதாரணமாக நபி (ஸல்) பேரீட்சை, கோதுமை, பால், இறைச்சி போன்றவற்றைத் தானே உணவாக உட்கொண்டார்கள்.

ஆனால் தற்காலத்தில் நாம் வகை வகையான புதுப்புது உணவுகளைச் சாப்பிடுகிறோமே இதையும் புதுமை (பித்அத்) என்பீர்களா? என்று கேட்கின்றனர்.

இவ்வாதம் தவறான புரிதலின் வெளிப்பாடாகும்.

பொதுவாக நமது செயல்பாடுகளில் இரண்டு விதங்கள் உண்டு.

1. உலகம் சார்ந்த காரியங்கள்

2. மார்க்கம் சார்ந்த காரியங்கள்.

உலகம் சார்ந்த காரியங்களைப் பொறுத்தவரை மார்க்க நெறிமுறைகளுக்கு விரோதமில்லாமல் புதுமைகளைச் செய்வது குற்றமல்ல.

நபியவர்கள் சாப்பிட்ட உணவுப் பொருட்களுக்கும் நாம் சாப்பிடும் உணவுப் பொருட்களுக்கும் ஏராளமான வேறுபாடுகள் இருப்பினும் அவ்விரண்டு வகையான உணவுகளையும் சாப்பிடுவதற்கு முன்பு கூற வேண்டியது பிஸ்மில்லாஹ் தான். உலகம் மாறியுள்ளது ஆனால் மார்க்கம் மாறவில்லை என்பதை இது நமக்குத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது.

ஆனால் மார்க்க விஷயங்களைப் பொறுத்தவரை அதற்கு குர்ஆன், மற்றும் நபிமொழிகளில் ஆதாரம் இருக்க வேண்டும். அதில் புதுமைகளைப் பின்பற்றக் கூடாது.

## பித்அத்கள் (புதுமைகள்) குறித்த நபிகளாரின் எச்சரிக்கைகள்

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்முடைய இநத (மார்க்க) விவகாரத்தில் அதில் இல்லாததைப் புதிதாக எவன் உண்டாக்குகின்றானோ அவனுடைய அந்தப் புதுமை நிராகரிக்கப்படும்.

அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி) நூல்: புகாரி: 2697

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: செய்திகளில் மிகவும் உண்மையானது அல்லாஹ்வுடைய வேதமாகும். நடைமுறையில் மிகவும் சிறந்தது முஹம்மது (ஸல்) அவர்களுடைய நடைமுறையாகும். செயல்களில் மிகக் கெட்டது (மார்க்கத்தின் பெயரால்) புதிதாக உருவானவையாகும். புதிதாக உருவாகக் கூடியவைகள் அனைத்தும் பித்அத்துகள் ஆகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். ஒவ்வொரு வழிகேடும் நரகத்தில் கொண்டு சேர்க்கும்.

அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) நூல்: நஸாயி 1560

## பித்அத்களை விட்டொழிப்போம்

நாம் குறிப்பிட்ட இந்த விஷயங்களை நடுநிலையோடு மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். காலம் காலமாக நாம் செய்வதே சரி என்று நம்பி இருந்து விடக்கூடாது.

அறிவுடையோரைத் தவிர எவரும் படிப்பினை பெறுவதில்லை. அல்குர்ஆன் : 02: 269

இஸ்லாத்தில் ஏற்கத் தகுந்த ஆதாரங்கள் என்பது திருக்குர்ஆன் மற்றும் நபிமொழி ஆகிய இந்த இரண்டும் தான்.

இவை அல்லாத எந்தக் காரியங்களும் இஸ்லாம் ஆக முடியாது என்பதை உணர்ந்து நபிகளாரின் காலத்திற்குப் பிறகு உருவாக்கப்பட்ட பித்அத்தான காரியங்களை விட்டு முஸ்லிம்கள் விலகிட வேண்டும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் செய்வானாக.

வெளியீடு :

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத்

**மாநிலத் தலைமையகம்**